**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2013–2014ஆம் நிதியாண்டில் மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு நாற்காலிகள் வழங்கிட ரூ. 27.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்வது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.09 நாள்: 28–02–2014
விஜய, மாசி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.03, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 23–01–2013.
2. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.3376/இவாததி–1/2013, நாள் 2.9.13.

-----

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டத்தினை 2012–2013 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்த தொடராணையும் ரூ.36.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர் /மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2013–14 ஆம் நிதியாண்டில் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு 450 எண்ணிக்கையிலான மாற்றி வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் வாங்கி வழங்கிட ரூ.27,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர்/மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த பின்பு, அதனை ஏற்று அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது:–

(i) 2013–14 ஆம் நிதியாண்டில், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட மடக்கு சக்கர நாற்காலிகள் (CP Chair) ஒன்றின் விலை ரூ.6,000/– என்ற வீதத்தில், 450 எண்ணிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வைத்திருப்போருக்கு மட்டுமே சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்படவேண்டும், மருத்துவ சான்று மட்டும் போதுமானதல்ல என்ற நிபந்தனையின் பேரில் வாங்கி வழங்கிட ரூ. 27.00 இலட்சம் (ரூபாய் இருபத்தேழு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்கிறது.

(ii) மடக்கு சக்கர நாற்காலிகளை (CP Chair) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி, திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்திட

அனுமதிக்கப்படுகிறது. ஒரு மடக்கு சக்கர நாற்காலி ரூ.6,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும் கொள்முதல் செய்திடவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235-சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் -101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் -II- மாநிலத் திட்டம் – JH மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் -19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்".
(து.தொ.கு 2235-02-101-JH-1914)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.10522/நிதி(சந)/14, நாள் 26.2.14 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை-78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
தலைமைக் கணக்காயர்(தணிக்கை), தலைமைச் செயலகம், சென்னை-9.
தலைமைக் கணக்காயர், சென்னை-18.

**நகல்:-**
நிதித்(சந) /வ.செ.பொது-II, வ.செ.பொது-I)துறை, சென்னை-9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.